# தொழில் வாழ்க்கையோடிணைந்த கல்வி இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் அனுபவங்கள்

திருமதி. அ. சத்தியசீலன்

கல்வியின் நோக்கங்கள் பலவாறாக அமைந்தாலும் இன்றைய நிலையில் தொழில் வாழ்க்கையுடன் இணைவு பெறுதல் என்பது அதன் மிக முக்கிய நோக்கமாகின்றது. அந்நோக்கினை டூயி, காந்தி, கார்ல்மார்க்ஸ் போன்ற கல்விச் சிந்தனையாளர்கள் வற்புறுத்தியிருந்தார்கள். கல்வி- அபிவிருத்திக் கிடையிலான இடைவினையுறவு, கல்வி மனிதவளம் மீதான முதலீடு போன்ற புதிய சிந்தனைகள் உருவாகிய சூழலானது தொழில் வாழ்க்கையுடனிணைந்த கல்வி என்ற கருத்திற்கு வலுக்கூட்டியது. அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் அனுபவங்களைச் சிறிது நோக்குவோம்.

இலங்கை ஏறக்குறைய நாலரை நூற்றாண்டுகளாக (கி.பி. 1505-1948) ஐரோப்பிய ஆதிக்கவாளர்களின் குடியேற்றமாக விளங்கியது. அதன் விளைவுகள் எல்லோருக்கும் ஆரம்பக்கல்வி, கட்டாயக்கல்வி, ஒரு சாரார்க்கு மட்டுமான உயர்கல்வி, நூல்சார் கல்வி, ஐரோப்பிய மொழிகளிலான கல்வி விசேடமாக ஆங்கிலக்கல்வி எனப் பலவாறாக அமைந்தன. 1796-1948 வரை இடம் பெற்றிருந்த பிரித்தானியர் ஆட்சி அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. கல்வி ரீதியிலான தாக்கங்களும் அதன் வெளிப்பாடே. பிரித்தானியருடைய கல்விக் கொள்கைகள் விசேடமாக நூல்சார்கல்வி, ஆங்கிலக்கல்வி, ஒரு சாராருக்கான உயர்கல்வி என்பவற்றை வற்புறுத்தின. அதனால் இலங்கையில் இரத்தத்தாலும் நிறத்தாலும் இலங்கையராகவும், செயலாலும், சிந்தனையாலும், ஆங்கிலேயராகவும் மாறத்தக்க வெள்ளைச்சட்டை உத்தியோகங்களை நாடிய ஒரு கூட்டத்தினர் உருவாக்கப்பட்டனர். பிரித்தானியர்காலக் கல்வியானது இலங்கையின் அபிவிருத்திக்கு, இலங்கை மக்கள் யாவரினதும் வாழ்க்கைத் தேவைப் பூர்த்திக்கு வழிகாட்டவில்லை. 1948இல் கிடைத்த சுதந்திரமோ 1972கள்வரை சுதந்திர இலங்கையிற் தொடர்ந்த அரசுக் கல்விக் கொள்கைகள், நடைமுறைகளோ குடியேற்ற ஆட்சியின் எச்சசொச்சங்களாகவே அமைந்தன. அவ்வப்போது கல்விக்கும் வாழ்க்கைத் தேவைக்கும் விசேட மாகத் தொழில் வாழ்க்கைக்கு மிடையிலான தொடர்புகள் வலியுறுத்தப்பட்டாலும் போதியளவு ஆர்வம் காட்டப்படவில்லை. அந்தப் பொருத்தமற்ற கல்வி முறையின் வெளிப்பாடுகளாக அமைந்தவையே கற்றோரிடையே வேலையின்மை, தாழ்தொழில், மனிதவிரயம், இளைஞர் அமைதியின்மை, இளைஞர் புரட்சி போன்றனவாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் கல்வியையும் தொழில் வாழ்க்கையையும் இணைக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டன. சேர்.பொன்அருணாசலம் 1901இல் "தேசிய கலாசார அடிப்படையாகவும், நற்பிரஜைகளை உருவாக்குவதனை மட்டும் கவனத்திற் கொள்ளாமல் அறிவியல் ரீதியாகவும், கல்வி-குறிப்பாக விஞ்ஞான தொழில்நுட்பக்கல்வி எங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும். புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவும், மறைந்து போகும் கைத்தொழில்கள் புனரமைக்கப்படவும் உள்ள இலங்கையில் உயர்தர உற்பத்திக் கைத்தொழில், வர்த்தகம் உட்பட தொழில் நுட்ப அறிவை வேண்டி நிற்கும் ஒவ்வொரு துறையின் வெற்றியும் வெவ்வேறு தொழில்களில் கட்டுப்பாட்டுடன் தொடர்பானோரின் முழுமையான பயிற்சியிலேயே தங்கியுள்ளது"[1] என்று குறிப்பிட்டார். அக்கருத்தினூடாக கல்வி தொழிலுலகுடன் இணைக்கப்படுவதனை வற்புறுத்தினார். 1901இல்

பாடசாலைகளில் தோட்டங்களை அமைத்து ஆரம்பப்பாடசாலைகளில் பாடவிதானத்தைக் கமத்தொழிலோடு தொடர்புடையதாக்க முடிவு செய்யப்பட்டன. காலப்போக்கில் பாடசாலைத் தோட்டத் திட்டத்துடன் கிராமங்களின் தேவைகளுக்கேற்ற வகையில் எளிய கைத்தொழிற் திட்டம் ஒன்றும், சுகாதார அறிவினைப் பெருக்கும் திட்டமொன்றும் சேர்த்துக் கொள்ளப்படுமென பொதுப் போதனைப் பணிமனை குறிப்பிட்டது.[2] 1905இல் ஆரம்பக்கல்வி தொடர்பான கருத்துக்களை முன்வைத்த வேஸ் குழுவினர் (Wase Commission) சாதனையை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை விதப்புரை செய்தனர்.[3] 1909இல் கமத் தொழில் திட்டமொன்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நியமனம் பெற்ற குழு சுயமொழிப் பாடசாலைகளில் பயிர்ச்செய்கையில் கூடுதலான பயிற்சி அளிக்க வசதியாக அப்போதுள்ள கல்வி முறை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், பாடசாலைத் தோட்டங்களைத் தொடங்குவதற்கு, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை ஊக்குவிக்க மேலும் நன்கொடை வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டது.[4] 1927 இல் ஆரம்பக்கல்விப் பாடவிதானத்தைச் சாதனையோடு கூடியதாக ஆக்க முயற்சி எடுக்கப்பட்டது.[5] இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் செயன்முறைக் கல்விக்கு முதன்மை வழங்குவதற்கான சிபார்சுகள், செயற்பாடுகள் அவ்வப்போது எடுக்கப்பட்டாலும் அவை தொடர்ச்சியானவையாகவும், வலுமிக்கனவாகவும் இடம்பெறவில்லை. செயன்முறைக் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழிற் பாடசாலைகள் காலப்போக்கில் அரசினால் கைவிடப்பட்டன. மதக்குழுவினர் அதில் ஆர்வம் காட்டினாலும் அறிவியற்கல்வி அதிகமாக விரும்பப்பட்ட நிலையில் தொழிற்பாங்குடை கல்வி நடைமுறைகள் பெரிதும் வரவேற்கப்படவில்லை.

20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தங்களைத் தொடர்ந்து தொழில் அனுபவங்களினூடான கல்வி முயற்சிகள் மீண்டும் வற்புறுத்தப்படலாயின. நாட்டின் தேசிய மறுமலர்ச்சிப் போக்குகள், சுதேசிய தலைவர்களினால் கொடுக்கப்பட்ட அரசியல் அழுத்தங்கள் அதற்கான காரணிகளாயின. 1930- 1947 வரையிலான அரசாங்க சபைக்காலத்தில் மாணவர்களது எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பாடசாலை வேலைகளை கிராமிய வாழ்க்கையுடனும், தொழில்களுடனும் தொடர்புபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. கிராமியப் பாடசாலைகளில் கல்வி பெறுவோர் விவசாயிகளாகவும், கைப்பணிகளில் தேர்ந்தவர்களாகவும் வரமுடியுமாகையால் விவசாயத்திற்கும், கிராமியக் கைப்பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அத்தகைய திட்டமொன்று கண்டிக்கு அருகாமையிலுள்ள ஹந்தேஸ எனுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அது ஹந்தேச திட்டம் எனப் பெயர் பெற்றது.[6] அத்திட்டத்தில் புகுத்தப்பட்ட புதிய பாடத் திட்டம் நான்கு பிரிவுகளை உடையதாகக் காணப்பட்டது.

1.சுகாதாரம்
2. சூழல்
3. தொழில்கள்
4. இலக்கியம், சித்திரம், இசை- அதன்படி $2^{1}/2$ மணித்தியாலங்கள் பாடசாலையில் கற்பித்தல், எழுதுதல் முதலிய பணிகளிலும் செலவிடப்பட்டன. அத்திட்டம் ஆரம்பத்தில் 14 பாடசாலைகளிலும் 1939 அளவில் 253 பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.[7] ஆயினும் பெற்றோர் எதிர்ப்புக் காட்டியமை, ஆங்கிலப் பள்ளிகளுக்குப் பிள்ளைகள் செல்ல ஆரம்பித்தமை போன்ற நடைமுறைகளினால் 1942 அளவில் கிராமியப் பள்ளித் திட்டம் மறைய நேரிட்டது. ஏறத்தாழ அதேகாலப் பகுதியில்- 1934இல் மனையியற் கலையை அடிப்படையாகக் கொண்டு, பெண்களுக்கும் கிராமியப் பாடசாலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. குழந்தைகளை பராமரித்தல், நோயாளரைப் பேணுதல், சமையற்கலை, தையற்கலை போன்ற செயற்பாடுகளுக்காக வாரத்திற்கு ஆறு மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டன. எனினும்

அத்திட்டமும் அதிக ஆதரவைப் பெறவில்லை.[8]

1937 அளவில் மாணவர்களை உள்ளூர் சூழலுக்கேற்ப பயிற்றும் பொருட்டும், செயல்முறைப் பாங்கினைப் பரப்பும் பொருட்டும் மத்திய பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதன்படி 1943இல் 11 பாடசாலைகள் மத்திய பாடசாலைகளாகப் புரமைப்புப் பெறத் தெரிவு செய்யப்பட்டன. அவற்றுள் 3 பாடசாலைகள் 1941இல் 22 ஆகவும் உயர்ந்தது.[9] அவற்றின் வளர்ச்சியில் அரசாங்க சபை பெரிதும் நாட்டம் செலுத்தியது. ஆரம்பத்தில் அப்பாடசாலைகள் உள்ளூர் சூழலுக்குப் பொருத்தமுடையனவாக, செயன்முறைப்பாங்குடையனவாக விளங்கின- அரைப்பங்கு நேரம் நூற் கல்விக்கும் மிகுதி அரைப்பங்கு நேரம் செயன்முறைக் கல்விக்குமென ஒதுக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் மத்திய பாடசாலைகளில் செயன்முறைப்பாங்கு இழக்கப்படுவதனையும், நூற்கல்விக்கு மதிப்பளிக்க பெற்றோரால் அப்பாடசாலைகள் தூண்டப்படுவதனையும், தேர்வு நோக்கிற்கு முதலிடம் கொடுக்கப்படுவதனையும் அறிகின்றோம்.

தொழிற்கல்வித் துறையைப் பொறுத்து கைத்தொழிற் பாடசாலைகள், தொழில்நுட்பப் பாடசாலைகள் அக்காலப் பகுதியில் இயங்கின. கைத்தொழிற் பாடசாலைகள் சுயமொழி மூலம் சீவனோபாயத்திற்கு உதவும் தொழில்களைப் பயிற்றுவனவாக காணப்பட்டன. 1941அளவில் அவற்றுள் பெரும்பாலானவை வணிக, கைத்தொழிற் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட எஞ்சியவை மத்திய பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டன. அரசாங்க தொழில்நுட்பப் பாடசாலைகள் தொழில்நுட்பத்துறை, வர்த்தகம், கலை ஆகிய மூன்று துறைகளை உடையனவாகக் காணப்பட்டன. தொழில்நுட்பத் துறையில் பொறியியல், பணிமனைப் பயிற்சி, கட்டடம் கட்டுதல், தொலைபேசி- தந்திப் பொறியியல், சுகாதாரப் பொறியியல் என்பன இடம் பெற்றன. வர்த்தகத்தில்- பொது வர்த்தகம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்குப் பதிவியல் என்பனவும் கலைத்துறையில் ஓவிய ஆசிரியர்களுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டன. 1933இல் தொழில்நுட்பக் கல்வியின் புனரமைப்புப் பற்றிய அறிக்கையொன்று கல்வி மந்திரியால் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பின்வரும் அம்சங்களும் இடம் பெற்றன.

1. அ) பொறியியல் ஆ) வர்த்தகம் இ) கைத்தொழில்கள் ஈ)கலைகள் என்ற நால்வகைப் பயிற்சிநெறிகளுக்கான வகுப்புக்கள் இருத்தல் வேண்டும்.
2. தொழில்நுட்பப் பாடசாலைகள் பொறியியற் பாடத்துக்கென மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும்.
3. அளத்தல், மட்டப்படுத்தல், அமைப்புப் பொறியியல் முதலியவற்றில் வகுப்புக்கள் தொடங்கப்படுதல் வேண்டும்.[10]

அவை ஏற்கப்பட்டு 1933, 1934களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இலங்கை சுதந்திரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சூழலில் கல்விமுறை பொறுத்து குறைபாடுகள் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டு வந்தன. அந்தவகையில் 1940இல் நியமனம் பெற்ற கல்வி விசேட குழு (கன்னங்கரா குழு) 1943 நவம்பரில் கல்வி சம்பந்தமான குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியபோது பின்வரும் அம்சமும் அதில் இடம் பெற்றது. கல்விமுறையில் காணப்பட்ட ஒருமைப்பாட்டுத் தன்மை நூற்கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்த அமைப்பில் நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்பு காணப்படவில்லை. தொழிற்சார்புடைய கல்விக்குத் தேவையிருந்தது.[11] குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் சிபார்சுகளை அக்குழு முன்வைத்தது. பாடசாலைகளை வகைப்படுத்தலூடாகக் கல்விக் குறைபாடுகளைச் சீர்செய்ய அக்குழு முயன்றது. அதன் பிரகாரம்.

1. ஆரம்பநிலை-5வயது தொடக்கம் 11 வயது வரை.

2. உயர்-ஆரம்ப நிலை 11 வயது தொடக்கம் 14 அல்லது 16 அல்லது 18 வயது
3. பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்வி, தொழிற்கல்வி.

அவ்வடிப்படையில் 5-11 வயது வரையிலான ஆரம்பப் பள்ளிகள் ஒரே வகைப்பட்டனவாக எல்லோருக்கும் பொதுவானதாக அமைய வேண்டும். அதற்கு அடுத்து உயர்- ஆரம்ப நிலைகளில் ஆங்கில முப்பாகுபாட்டு அமைப்பைக் கடன்பெற்று மூவகைப்பள்ளிகள் சிபார்சு செய்யப்பட்டன.

1. 11-18 வரையிலான ஏழாண்டுப் பயிற்சி நெறியுடன் பரந்த பொதுக்கல்வியை அளித்து, பாடசாலைத் தகுதிப் பத்திரம், பல்கலைக்கழகம், தொழிற்நுட்பக் கல்லூரிகள்வரை இட்டுச் செல்லும் இடைநிலைப் பள்ளிகள்.
2. 11-16 வரையிலான ஐந்தாண்டுப் பயிற்சி நெறியுடன் வர்த்தக தொழிற்சாயலையுடைய கல்வியை அளித்து, பாடசாலைப் பத்திரம் தொழில்நுட்பக்கல்லூரிகள் வரை இட்டுச் செல்லும் சிரேட்ட பள்ளிகள்.
3. 11-14 வயது வரையிலான மூன்றாண்டுப் பயிற்சிநெறியைக் கொண்டு செயன்முறைப் பாங்குடைய செயன்முறைப் பள்ளிகள்.[12]

மேலும் பயிற்சிகளைப் பெற விரும்பும் மாணவர்கள் இரண்டாண்டுகள் விவசாயப் பள்ளிகள் அல்லது கைத்தொழிற் பள்ளிகளில் பயிற்சிகளைப் பெறலாமெனவும் சிபார்சு செய்யப்பட்டது. தொழில்நுட்பக் கல்வியை மேலும் விரிவுபடுத்த இலங்கையின் முன்னேற்றம் விரிவடையவில்லையென்றும், அப்போது இருக்கும் நிலையே போதுமானதென்றும் கூறப்பட்டது.

1948இல் இலங்கை சுதந்திரமடைந்தது. சுதந்திர இலங்கையில் கல்வி, நாட்டுச் சூழலுடன் தொடர்புற வேண்டும், நாட்டினது அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனைகள் மேலும் வலுப் பெற்றன. அதற்கான வழிமுறைகளும் அவ்வப்போது முன் வைக்கப்பட்டன. 1950இன் வெள்ளையறிக்கை பாடசாலையமைப்பு முறைமை பொறுத்து மாற்றத்தை ஏற்படுத்தியபோது ஆரம்ப நிலையின் இறுதியில் இடம்பெறும் தேர்வில் (5-11 வயது) சித்தியடைவோர் 11-14 வயது வரை கனிட்ட இடைநிலைப் பள்ளியில் இடம் பெறுவர் என்றும் அத்தேர்வில் சித்தியடையாதோர் 11-14 வயதுவரை ஆரம்பப் பின்னிலை செய்முறைக் கல்வியைப் பெறுவர் என்றும் குறிப்பிட்டது.[13] 1951ஆம் ஆண்டின் கல்வித்திருத்தச் சட்டம் 1950இன் வெள்ளையறிக்கைச் சிபார்சுகளுக்கு உருக்கொடுத்தது. எனினும் 11 வயதில் இடம்பெறும் தேர்வினைக் கைவிட்டு 14 வயதுவரை யாவருக்கும் கனிட்ட இடைநிலைக்கல்வி வழங்கப்படுவதனை ஏற்றுக் கொண்டது. கனிட்ட இடைநிலை முடிவில் தெரிவுப் பரீட்சை இடம்பெற அதில் தேறியோர் சிரேஷ்ட இடைநிலைக்குச் செல்ல, ஏனையோர் தொழிற்பள்ளிக்கு அல்லது கட்டணம் செலுத்தும் தனியார் பள்ளிக்கு அல்லது பள்ளி நீங்கிச் செல்லுவர் என்றும் குறிப்பிட்டது.[14] 1962இல் தேசியக்கல்வி ஆணைக்குழு பாடசாலை பற்றிய இன்னோர் அமைப்பைச் சுட்டியது. 5/6-14 வயதுவரை இடம்பெறும் கல்வி கனிட்ட பாடசாலையில் நடைபெற வேண்டுமெனவும் 14 வயதின் இறுதியில் பாடசாலையைவிட்டு நீங்குதல், தொழிற்பயிற்சிக்கு அரசின் உதவியை நாடுதல், ஜெயேஷ்ட வித்தியாலயம் எனப்பட்ட சிரேஷ்ட பாடசாலையில் கல்வி பெறுதல் என்ற மூன்று வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுதல் பற்றியும் குறிப்பிட்டது.[15]

அதன்படி ஒவ்வொரு ஜெயேஷ்ட வித்தியாலயத்திலும் விவசாயக் கல்வி, பொறியுமுறையியல்கல்வி, விஞ்ஞானக்கல்வி, மக்கட்பண்பியலும் வர்த்தகமும் என்ற பிரிவுகள் இடம் பெற்றன. 1966ஆம் ஆண்டு வெள்ளையறிக்கை 14 வயது வரை கனிட்ட வித்தியாலயத்தில் முதல் 5 வருட ஆரம்பக் கல்வியும் பின் மூன்றாண்டு ஆரம்பப்

பின்னிலைக் கல்வியும் உண்டு. 6-8 வகுப்புக்களில் ஆசிரிய ஆலோசகர்களால் மாணவர்கள் அவதானிக்கப்பட்டு (1) செய்முறைப் பாடசாலை (2) கனிட்ட தொழில்நுட்பப் பாடசாலை- வர்த்தகம், செய்பணிகள் (4) ஜெயேஷ்ட வித்தியாலயம் என்பனவற்றுள் ஒன்றுக்கு வழிப்படுத்தப்படுவர் என்று கூறியது.[16] இப்பிரேரணை கண்டனத்திற்குள்ளானதால் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை.

கொள்கை வளர்ச்சிப் போக்குகள் மேற்குறிப்பிட்டவாறு அமைய நடைமுறையில் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1950 வெள்ளையறிக்கை செயல்முறைக்கல்விக்கு ஊக்கமளித்த நிலையில் பள்ளிக்கூடங்களில் செய் பணிகளை ஆரம்பிக்கும் முயற்சியாக தச்சுவேலை, உலோகவேலை, நெசவுவேலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.[17] 1956இல் தொழில் வழிகாட்டுதல் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் வழிகாட்டப்போதிய தொழில்வளர்ச்சி காணப்படாமையினால் அதன் உபயோகம் நீடிக்கவில்லை. 1961இல் பாடசாலைகளில் இடைநிலைமட்டத்தில் வேலை அனுபவங்களை அறிமுகம் செய்யும் முயற்சி தொடங்கப்பட்டது. களை பிடுங்குதல், உணவு உற்பத்தி என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. தொழில் மகத்துவத்தை மாணவர் உணரச் செய்யும் பொருட்டு சிரமதான வேலைகள் பாடசாலைகளில் எங்கனும் ஆரம்பிக்கப்பட்டன.[18] 1965இல் ஆரம்பிக்கபட்ட திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் விவசாயம் பாடமாக்கப்பட்டது.19 1966 க.பொ.த.(சா/த)வில் 311 பேர் உலோக வேலை, 2307 மாணவர் விவசாயம். 1580 பேர் நெசவு, 369 பேர் மட்பாண்டம், 1779 மாணவர் மரவேலை, 12573 மாணவர் மனையியல் பாடங்களுக்குத் தோற்றியிருந்தார்கள் [20] என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்பத்துறை பொறுத்து இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியை விடக் கட்டுப்பெத்தை செயல்முறைத் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறைத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் என்பன குறிப்பிடத்தக்க பங்களிப்பாற்றின. கட்டுப்பெத்தை நிறுவனம் 1960இல் ஆரம்பிக்கப்பட்டது.[21] அங்கு இரசாயனம், சிவில், மின்சாரம், பொறியியல் என்பனவற்றில் இரண்டாண்டுப் பயிற்சிகள் இடம் பெற்றன. அம்பாறைத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் 1956இல் சேவைக்குத் தேவையான வல்லுனர்களைப் பயிற்றுவென ஆரம்பிக்கப்பட்டது.[22] அந்நிறுவனம் 1966இல் கல்வியமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. குண்டசாலை விவசாயப் பாடசாலை, குளியாப்பிட்டி விவசாயப் பயிற்சிக் கல்லூரி, ஹர்டி நிறுவனம் போன்றன தொழில்நுட்பக் கல்வித்துறையில் செயலாற்றி வந்தன.

1963இல் தொழில்நுட்பக்கல்வி பற்றி விசாரணை நடத்திய குழு பின்வரும் விடயத்தைக் குறிப்பிட்டிருந்தது. விருத்தியுறும் ஒரு நாட்டில் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் ஆகிய பல்வேறு துறைகளுக்கும் தம்மாலான முழுப் பங்களிப்பினையும் ஆற்றுவதற்கு அத்தியாவசியமான நுண்ணறிவும், திறமையும் உடையவர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்றப்பட வேண்டும். தாம் வாழும் சமூகத்திற்கேற்ப ஒருவரைத் தயாா்படுத்துவது மட்டும்தான் கல்வியின் நோக்கமல்ல. அவனுடைய உள்ளார்ந்த திறமைகளும், ஆற்றல்களும் வளர்க்கப்பட வேண்டும். தேசிய முன்னேற்றத்திற்கு அவசியமான, வளமாக மனிதவளம் விளங்க வேண்டுமென்ற நோக்கில் தொழிற்கல்வி விசேட கவனத்திற்குரிது.[23]

அந்த வயைில் 1972வரையிலான காலகட்டப் பகுதிவரை பாடசாலை மட்டம், மூன்றாம் நிலை மட்டத்தில் கல்வி தொழில் அனுபவங்களுடன் இணைப்பதற்க வகையிலான சீபார்சுகளும், செயற்பாடுகளும் அவ்வப்போது இடம் பெற்று வந்தன. ஆயினும் அரசு, பெற்றோர், மாணவர் என்ற முத்தரப்பினரும் அதிக அக்கறை காட்டாதவிடத்தும்,

பொருத்தமற்ற சூழ்நிலை காரணமாகவும் எடுத்த முயற்சிகள் பெருமளவில் தோல்வியிலேயே முடிவடைந்தன.

1970இல் இடதுசாரி ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது, அதனுடைய ஆரம்பகால கல்விக்கொள்கை நாட்டின் தேவைகளை, விசேடமாக இளைஞர் சமுதாயத்தின் தொழிற்தேவைகளைக் கருத்திற் கெடுப்பதாக அமையவில்லை. அதன் பிரதிபலனே 1971இன் இளைஞர் கிளர்ச்சியாகும். 1971இல் வெளிவந்த டட்லிசியர்களின் அறிக்கை கல்வியின் பொருத்தமின்மையை, அக்கல்வியினாலேற்பட்ட மனிதவள விரயத்தை சுட்டியது.[24] பாடசாலைகளோ, பல்கலைக்கழகங்களோ நாட்டின் நலனுக்கேற்ப இயக்கப்படாமையும், இடைநிலைப் பள்ளிகள் உடை நலுங்கா உத்தியோகங்களுக்கே மாணவரைத் தயாரிக்கும் கருமத்தில் கண்ணாயிருப்பதுவும், மாணவர்கள் தேர்வையே இலக்காகக் கொண்டு கல்வி பயில்வதுவும் சுட்டிக்காட்டப்பட்டன. அப்படியான நிலையில் உருவாகிய கல்வி பொருளாதாரத்தின் தேவைக்குப் பொருந்தாத ஆட்களை, அதிக செலவில் உற்பத்தியாக்குவதனால் விரயமாகவே முடிந்தது என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் திண்டாடிய அரசு தீர்வுக்கு வழியாகக் கல்வியின் புதிய பாதை என்றழைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களை முன்வைத்தது. அதுவே 1972இன் கல்விச் சீர்திருத்தங்களாயமைந்தன. 1972இன் கல்வியின் புதியபாதை பின்வரும் கருத்துக்களை வெளிப்படுத்தியது. அதுவரை பள்ளிக்கூடங்களில் இடம்பெற்ற ஆரம்ப பின்னிலைக் கல்வியில், செயல்முறையினின்றும் முற்றிலும் விலகி வெறும் புத்தகங்களின் எல்லைக்குள் அடங்கி மாணவர்களைக் கல்விப் பொதுச் சான்றிதழ்ப் (சா/த) பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் படிப்பே இடம்பெற்றது. பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெற்றவர்கள் பல்கலைக்கழகம் புகும் கருத்துடன் படிப்பில் இறங்க அவ்வாறு செய்ய இயலாதவர்கள் வெறும் புத்தக அறிவின் எல்லைக்குள் அடங்கிய க.பொ.த. சான்றிதழ் (சா/த) மட்டும் உடையோராக வேலைதேடிக் களத்துள் இங்குகிறார்கள்.[25] 1872இன் கல்வியின் புதிய பாதை கல்வியையும் வேலையனுபங்களையும் இணைக்க வேண்டுமென்பதில் அக்கறை காட்டலாயிற்று. அதனால் அச்சீர்திருத்தங்களில் அதன் நோக்கங்களாக கருவிகளைக் கையாளப் பழகுதல், உழைப்புப் பண்பாட்டை வளர்த்தல், ஆளுமை விருத்தி பெறல், பிள்ளை- சமுதாயத் தொடர்புகள் விரிவடைதல் என்பன குறிப்பிடப்பட்டன.[26]

அதன் அடிப்படையில் பாடசாலைகளில் தொழில்முன்னிலைப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் பிரதான பொறுப்பு பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் விடப்பட்டது. அதற்கென ஆறு பாடவேளைகள் ஒதுக்கப்பட்ட போது நான்கு பாட வேளைகள் செயன்முறைப் பயிற்சிக்கும் ஏனைய இரண்டு பாடவேளைகள் கோட்பாட்டு விளக்கத்திற்குமாக ஒதுக்கப்பட்டன.[27] அது பற்றிய மேலதிக தெளிவினைப் பெறுவதற்கு ஆசிரியர்களுக்கான குறுகியகால முன்சேவைப் பயிற்சி வழங்குவதான ஒழுங்கும் செய்யப்பட்டது.

மாணவர் தொடர்பாக பள்ளிக்கூடக் கல்வி மூன்று படிநிலைகளாக்கப்பட்டன.[28]

1. 1ஆம் வகுப்பு- 5ஆம் வகுப்பு தொடக்கக் கல்வி.
2. 6ஆம் வகுப்பு- 9ஆம் வகுப்பு கனிட்ட இடைநிலைக் கல்வி.
3. 10ஆம் வகுப்பு-11ஆம் வகுப்பு சிரேஷ்ட இடைநிலைக் கல்வி.

6முதல் 9ஆம் வகுப்புகளான கனிஷ்ட இடைநிலையில் 10 பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. அதில் முன்தொழில் படிப்பு I, முன்தொழில் படிப்பு II ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டன. முன் தொழில் படிப்பு Iஇல் கமம், வணிகம், மனையியல், மரவேலை, உலோகவேலை,

மட்பாண்டம், நெசவு என்பனவும்; முன்தொழில் படிப்பு 11இல் பள்ளிக்கூடம் அமைந்துள்ள சூழலிலுள்ள யாதாயினுமொரு தொழில்களுக்குள் ஒன்றும், மோட்டார் எந்திரவியல், புகைப்படக் கைத்தொழில் அச்சடிப்பு நுணுக்கங்கள் என்பனவும் இடம் பெற்றன.[29]

அங்கு எல்லா மாணவர்களும் 6-9 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு முன்தொழிற் படிப்பை மேற்கொள்ள வேண்டும். அதனூடாக மாணவர் தொழிலுலகிற்கு அறிமுகம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்பட்டது. இக்கலைத்திட்டம் புதிய தானமையாலும், நகரப் பாடசாலைகள் உயர் தொழில்நுட்பங்களுடன் இணைந்த பாடங்களையும் கிராமப் பாடசாலைகள் சாதாரண தொழிற் பாடங்களையும் தெரிவு செய்ய வேண்டியிருந்த நிலைமை சமூக அமைப்பைப் பேணுகின்ற ஒரு நிலைமைக்கு மாற்றி விடுமென்ற அச்ச உணர்வைத் தோற்றுவித்தமையாலும் ஒழுங்கான முறையில் பரீட்சித்துப் பார்ப்பதற்கான கால ஒதுக்கீடு இன்றி 1977இல் நீக்கப்பட்டன. 1977இன் ஐக்கிய தேசியக் கட்சி அரசு தொழில் முன்னிலைப் பாடங்களை நீக்கியது மட்டுமன்றி அவற்றுக்குப் பதிலாக தொழில் நுட்பப் பாடங்களை அறிமுகம் செய்தது.

1981இன் கல்விச் சீர்த்திருத்தத்திற்கான ஆலோசனைகள்

அ பொதுக்கல்வி அளித்தற்கான பாடசாலைமுறைமை
ஆ) பல்கலைக்கழக கல்விமுறைமை
இ) மூன்றாம் நிலைக்கல்வி முறைமை

என வகைப்படுத்தியதுடன் பாடசாலை முறைமையினை

அ) 1ஆம் தரம்-5ஆம் தரம்-ஆரம்பப் பாடசாலை
ஆ) 6ஆம் தரம்-8ஆம் தரம்-கனிட்ட இடைநிலைப் படிப்பு
இ) 9ஆம் தரம்-11ஆம் தரம்-சிரேஷ்ட இடைநிலைப் படிப்பு
ஈ) 12, 13ஆம் தரம்-கல்லூரி நிலை.

என வகைப்படுத்தியது.[30] கனிட்ட இடைநிலைப் பாடசாலை மட்டத்தின் (தரங்கள் 6-8) பாடவிதானமானது, மாணாக்கன் ஆரம்ப மட்டத்தில் முயன்று பெற்ற அடிப்படை அறிவினையும் தேர்ச்சித் திறன்களையும் வலுப்படுத்திக்கொள்ள உதவுவதோடு மேற்கல்விக்கு அத்திவாரமிடுவதாயும் அமையும். அத்துடன் ஒரு சில தொழிற்தொகுதிக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சித் திறன்களைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்வதன் மூலம் படிப்படியாக வேலை உலகிற்கு அறிமுகம் செய்யவும் வழிகோலும்.[31] என்பதாக குறிப்பிடப்பட்டு அப்பாடவிதானமானது 9 பாடங்களை உள்ளடக்கியதாக அமைந்தபோது வாழ்க்கைத் தொழிற்றிறன்கள் என்ற பாடமும் அதில் இடம் பெற்றது. முன்னர் இடம் பெற்றிருந்த தொழில் நுட்பப் பாடங்களுக்குப் பதிலாக வாழ்க்கைத் தொழிற்றிறன் பாடங்கள் இடம் பெற்றன. இப்பாடத்தைப் படிப்பதன் முக்கிய நோக்கங்களாகப் பின்வருவன குறிப்பிடப்பட்டன.

1. வேலையுலகில் பிள்ளையைப் புகுத்தி அதன் தொடர்பில் நம்பிக்கை உறுதி வாய்ந்த உளப்பாங்கை ஏற்படுத்தல்.
2. பொதுவான கருவிகள், உபகரணங்கள் ஆகியனவற்றை உபயோகித்தல் தொடர்பாக ஓரளவு பரிச்சயமும், கைவன்மையும் மாணவனுக்குக்கிட்டும் வகையிற் குறித்த வயது மட்டத்திற்கு ஏற்புடையவையென வகுக்கப் பெற்ற வீட்டு நிலைத் தேர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
3. குறித்த சில தொழில்முறை முன்னிலைத் தேர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து, குறித்த சில தொழில் தொகுதிகளுக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சிகளில் மாணாக்கர்களை வினைத்திறமை பெறச்செய்தல்.
4. நூற்கல்வி நோக்குச்சாரா நெறிபடைத்த மாணாக்கனுக்கு, அவன் தன் திறமையினைப் புலப்படுத்தவல்ல முறையிலே பயன்கூர் கல்விச்

செயற்பாடுகளுக்கு வகைசெய் தன்மையில் செயற்பாட்டு அடிப்படையிலான பாடமொன்றை ஏற்பாடு செய்தல்.[32]

சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலை மட்டத்தில் (தரம் 9-11) கனிட்ட இடைநிலையில் அமைந்த 9 பாடங்களும் இடம்பெறும்போது வாழ்க்கைத் தொழிற்றிறன் என்பதற்குப் பதிலாக தொழினுணுக்கப் பாடம் இடம் பெற்றது. அப்பாடத்தினூடாக வாழ்க்கைத் தொழிற்றிறனுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் அதேவேளை மரவேலை, உலோகவேலை, விவசாயம், மனையியல் போன்ற பொருத்தமான விருப்பத் தெரிவுப் பாடங்கள் மூலம் ஓரளவு விசேட பயிற்சி அளிக்கப்படும். முன்கூட்டியே வாழ்க்கைத் தொழிற்றிறன்களை நாடுபவர்களுக்குத் தொழினுணுக்கக் கல்வி அதிகார சபையின் கீழ் க.பொ.த. தொழினுணுக்கக் கல்விநெறி பயில்வதற்குள்ள வசதியுள்ளமை காரணமாக, பாடசாலைகளில் வாழ்க்கைத் தொழிற்றிறன்கள் நெறிப்பாட்டுக்கு அழுத்தம் கொடுக்கப்படும். தொழிற்சந்தையில் மிகுதியாக எதிர் பார்க்கப்படும் பொதுவான தேர்ச்சித்திறன்கள், நாட்டங்கள், தரவுகள், ஆள்சார் பண்புகள் என்றின்னவற்றை அபிவிருத்தி செய்யும் அதேவேளையில், வேலையுலகின்பால் மாணாக்களின் நாட்டத்தை மையப்படுத்த வேண்டியதும் அவசியமான-தெனக் கருதப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[33] அவற்றினூடே கனிட்ட இடைநிலை முடிவில் நடத்தப்படும் பொதுப் பரீட்சையொன்றின் மூலம் ஒரு பகுதியினர் சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளுக்கும், மறுபகுதியினர் தொழிற்கல்வி அதிகாரசபையின் கீழுள்ள க.பொ.த. தொழில் நுணுக்க நெறி அல்லது கைப்புனைவியலர் பயிற்சி நெறிக்கும் அனுப்பப்பட உத்தேசிக்கப்பட்டது. சிரேஷ்ட இடைநிலைமட்ட முடிவில் நிகழும் க.பொ.த. சாதாரண பரீட்சையில் தகுந்த சான்றிதழுடையோர் கல்லூரிக் கல்விக்கும், ஏனையோர் தொழில் நுணுக்கம், தொழில் நுட்பம், வர்த்தகம், நுண்கலைப் பயிற்சி நெறிகளைத் தொடரவும் வழி காணப்பட்டது. அவை தவிர 1981இன் ஆலோசனைகளில் பொதுக்கல்வி தொடர்பான விடயங்களில் தொழிலுக்கு வழிகாட்டல். 'வேலை உலகிற்கு நிலைமாறுதல்' சம்பந்தமான விடயத்தில் மாணாக்கனுக்கு உதவுதல், மூன்றாம் நிலைக்கல்வி மட்டத்தில் பல்கலைக்கழகம் சாராக்கல்வியையும் தொழில் நுணுக்க, தொழில் முறைக்கல்வியையும் ஆற்றுப்படுத்தி, இயைபுறுத்தி, அபிவிருத்தி செய்து ஆதரிக்கும் நோக்கின் பொருட்டு மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவொன்று ஸ்தாபித்தல் போன்ற நிலைமைகளும் உருப்பெற்றன.[34]

வாழ்க்கைத்திறன் கல்வியில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் போதியளவில் இல்லாமை, மாணவர் மதிப்பீட்டுக்குப் பொருத்தமான மதிப்பீட்டு முறைகள் விருத்தி செய்யப்படாமை, எட்டாம் ஆண்டின் பின்னரான வாழ்க்கைத்திறன் கல்வித் தொடர்ச்சி உரிய முறையில் இடம் பெறாமை போன்ற இடர்களினால் முழுமையான பயன் பெறப்படவில்லை.

1991இல் இளைஞர் பிரச்சனை பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு இலங்கையின் கல்விக்கும் வேலைவாய்ப்பிற்குமிடையேயுள்ள இணக்கப் பிறழ்வைச் சுட்டிக்காட்டியதுடன் இடைநிலை மட்டத்திலிருந்து கல்விக்கும் வேலையுலகிற்குமான இணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதனையும் சுட்டியது.35 அதனால் ஆண்டு ஒன்பதில் தொழில்நுட்பக்கல்விச் சான்றிதழ்ப் பயிற்சிநெறி சேர்த்துக் கொள்ளப்பட்டது.. அதன் மூலம் விவசாயம் கைத்தொழில், மனைப்பொருளியல், வர்த்தகம், தொழில்நுட்பவியல் எனப்பல பகுதிகள், உபபகுதிகள் கொள்ளப்பட்டு பாடசாலைகளிலும், சுற்றுப்புறங்களிலும் கிடைக்கக்கூடிய வளங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சிகளைப் பெற ஒழுங்குகள் செய்யப்பட்டன. 1991 மார்ச்சில் தேசிய கல்வி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அக்குழு நாட்டில் மாறிவரும் தேவைக்கேற்ப கல்வியை மாற்றியமைக்க ஏற்ற வழிவகைகளை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கும் கடமையினை

ஆற்றவே நியமனம் பெற்றது. அக்குழுவினர் சமகால இலங்கையின் கல்விச் செயற்பாடுகளை ஆராய்ந்து உடனடிச் செயற்பாடுகளுக்குரிய சில முன்னுரிமைகளை முன்வைத்தபோது அவற்றுள் உயர்கல்வி, மூன்றாம்நிலைக்கல்வி, தொழிற்கல்வி சார்ந்தவையும் முதன்மைப் படுத்தப்பட்டன. அத்துடன் பொதுக்கல்வி ஊடான சுயவேலை வாய்ப்புக்கான செயற்திட்டங்களின் போதாமை பற்றிய விபரங்களும் 'செயல்முயற்சிப் பாடசாலை' என்ற அமைப்புப் பற்றிய முன்மொழிவும் அதில் முக்கிய இடம் பெற்றன.[36] தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக் கல்விக்கான விதந்துரைகள் 1995இல் உருவாக்கப்பட்டன. விதந்துரைகளுக்கான நோக்கங்களுள் கல்வியை வேலையுலகுடன் இணைப்பதற்குரிய நடவடிக்கைகளைப் பரவலாக்குதல், தொழிற் கல்வியைப் பன்முகப்படுத்துதல், பல்கலைக் கழகக் கல்வியில் பயன்மிகு மாற்றங்களைக் கொண்டு வருதல் போன்றன சிறப்பிடம் பெற்றிருந்தன. அந்த அடிப்படையில் சிரேஷ்ட இடைநிலைக்கல்வி இரு மட்டங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது. சிரேஷ்ட இடைநிலை மட்டம் சாதாரணத்தில் (10,11ஆம் தரங்கள்) இடம் பெறும் அடிப்படைப் பாடங்கள் ஏழில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஒரு பாடமாக அமைந்ததுடன் தெரிவுப் பாடங்களுள் ஒன்றாக தொழில் நுட்பப் பாடங்கள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொழில் நுட்பப் பாடங்களின் தெரிவும் (விவசாயவியல், பொறியியல், உற்பத்தியியல், சேவையியல்) இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.[37] 1997ஆம் ஆண்டினைத் தொடர்ந்து அறிமுகம் செய்யப்பட்டுவரும் கலைத்திட்ட மாற்றங்களிலுள்ளே வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்வி என்பது ஒரு பாடமாக இடம் பெறத் தொடங்கி உள்ளமையும், 6-9ஆம் தர மாணவர்களுக்கான செயற்பாட்டு அறை ஒழுங்கமைப்பு, தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல், கல்வி ஆற்றுப்படுத்தல், சீர்மியம் போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளமையும் கல்வியைத் தொழில் வாழ்க்கையுடன் உரசலின்றி இணைப்பதற்கான பல்வேறு முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாலோசனைகள் நடைமுறைகளுக்கான வெற்றி தோல்விகளைப் பொறுத்திருந்து மதிப்பீடு செய்தலே பொருத்தமானதாக அமையும்.

தொகுத்து நோக்கும்போது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலிருந்தே அவ்வப்போது கல்வியைத் தொழில் வாழ்க்கையுடன் இணைப்பதற்கான கொள்கை-கள், நடைமுறைகள் இடம் பெற்று வந்தமையை அறிய முடிகிறது. ஆயினும் காலனித்துவ ஆட்சியின்கீழ் அந்நோக்கு எதிர் பார்த்தளவிற்கு வெற்றியடையவில்லை என்பதும், மறுவலமாக நூல்சார் கல்வி வளர்ச்சி கண்டதும் கண்கூடு. 1948இல் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. இருந்தபோதிலும் காலனித்துவத்தின் மறைமுகச் செல்வாக்குத் தொடர்ந்தமையினால் கல்வியில் பழைய போக்கு நீடித்தது. 1972இல் அரசு கல்விக் கொள்கைகளை முற்றிலும் மாற்றியமைக்க விரும்பியது. அரசியல் ரீதியாக முழுமையான இறைமையுள்ள குடியரசாக நாடு பிரகடனப் படுத்தப்பட்டமையும், முன்னரிருந்த பொருத்தமற்ற கல்வி முறைமையின் காரணமாக நாடு பல்வேறு அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் நோக்கியமையும் அதற்குக் காரணிகளாயின.

அதனால் நூற்கல்வியுடன் தொழில் வாழ்க்கைக் கல்வி, பயிற்சி ஆகியவற்றின் தேவை உணரப்பட்டுப் புதிய கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனாலும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் கல்விக் கொள்கைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. அதனால் தொழில் வாழ்க்கைக் கல்வி முறைமையின் தொடர் பயன்கிடைக்காமற் போனது மட்டுமன்றி முழுமையான விளைவுகளையும் மதிப்பிட முடியாமற் போயிற்று.

மீண்டும் 1990களில் தொழில் வாழ்க்கைக் கல்வித் தேவை உணரப்பட்டது. அதற்காகப் பல்வேறு கொள்கையாக்கங்கள் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனை இற்றைவரை அவதானிக்கலாம். கல்வி இன்றைய நிலையில் சமூகத்தின் தொழில் வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டியது அவசியமானது. அதனூடாகத்தான் தனிமனித விருத்தி, சமூக விருத்தி, நாட்டு அபிவிருத்தி என்ற இலக்குகளை உரியமுறையில் அடையமுடியும். அதனால் புதிய நடைமுறைகளைச் செவ்வனே கொண்டு நடத்தி வெற்றிகாண வேண்டியது அரசு, பெற்றோர் என்ற இருசாராரதும் அடிப்படைக் கடமையாகும்.

***அடிக்குறிப்புகள்***

1. Speeches and writings of Sir P.Arunachalam Vol. 1, H.W. Cave and Co., Colombo, Appendix Educaion in Ceylon-A Centenery Volume I, Ministry of Ecucation and Cultural affairs, Colombo, 1968, p.235.
2. ஜயவீர.சுவர்ண, "பாடவிதானச் சீர்திருத்த முயற்சிகள் 1900-1930", இலங்கையிற்கல்வி. நூற்றாண்டு விழா மலர், பாகம் 2, கல்வி கலாசார அமைச்சு, கொழும்பு, 1969, ப. 649-650.
3. Sessional Paper XXVII of 1905 (LC)
4. Sessional Paper XXXVII of 1909 (LC)
5. ஜயவீர.சுவர்ண, "பாடவிதானச் சீர்திருத்த முயற்சிகள்", மு.கு.நூ., ப.652.
6. சில்வா.எம்,எஸ்.த., "கல்வியில் ஒரு பரிசோதனை", இலங்கையிற் கல்வி, நூற்றாண்டு விழா மலர், பாகம் 3, மு.சு.நூ., ப.1058
7. மேற்படி. ப. 1062-1063.
8. மேற்படி.,
9. Sumathipala.K.H.M., History of Educaion in Ceylon, Tissara Prakasaya, Colombo, 1968, pp.333-334
10. Ibid, p. 343.
11. Sessional Paper XXIV of 1943 (SC)
12. Sumathipala.K.H.M., Op.cit, p.275
13. சந்திரசேகரன், சோ., கருணாநிதி.மா, இலங்கையின் கல்வி வளர்ச்சி, (கட்டுரைத் தொகுப்பு), சூடாமணி பிரசுரம், சென்னை, 1992, P.93
14. மேற்படி.,
15. Sessional Paper XVII of 1962, Report of the National Education Committee.
16. சந்திரசேகரன்.சோ., கருணாநிதி.மா., மு.சு.நூல்.
17. முனசிங்க.வீ.சி.பி. 'ஆரம்பக் கல்வி', இலங்கையிற்கல்வி நூற்றாண்டு விழா மலர், மு.சு.நூ., ப.925.
18. மேற்படி.,
19. மேற்படி.
20. மேற்படி.
21. Jayasuriya.J.E., Education in Ceylon, Before and After Independence Associated Educational Publishers, Peradeniya, Ceylon, 1969, p.153.

22. Ibid.,
23. Sessional Paper of 1963. Report of the Commission of Inquiry on Technical Education, July 1963, p.76.
24. Jeyasuriya. J.E., op.cit.
25. இலங்கைக் கல்வி அமைச்சு, கல்வியின் புதிய பாதை. 1972, ப.10.
26. மேற்படி., ப.ப.15-16.
27. மேற்படி. ப.14
28. மேற்படி. ப.04.
29. மேற்படி. ப.14.
30. கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள் 1981, அரசாங்க அச்சகம், கொழும்பு., ப.ப. ii.iv.
31. மேற்படி., ப.03.
32. மேற்படி
33. மேற்படி., ப.ப.05 - 06
34. மேற்படி., ப.ப. 18 - 19
35. Sessional Paper No.1, 1990, Report of the Presidential Commission on Youth, pp. 30-37.
36. Sessional Paper V; 1992, First Report of the National Education Commission pp. 118 - 119.
37. The Sunday Observer, 17.08.1997, Reform proposals for an Education System suitable to the 21st Century, National Education Commission.